**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.100/2021**

**2025 ஆம்** வருடம் மார்ச் மாதம் 18 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெரால்டு செல்வநாதன் | ஜாதி | : | |
| த.பெ | : | சம்மனசு | தொழில் | : | தனியார் பணி |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 42/2025 |

தேதி : 18.03.2025

**10, 11** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கை இறந்துபோன ஜெர்மன் என்பவரின் பண பலன்களை பெறுவதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இறந்துபோன ஜெர்மன் என்பவர் எழுதி வைத்த உயிலின் படி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஜெர்மன் என்பவர் எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை என்றும், உயில் படி நான் வாரிசு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ஜெர்மன் என்பவர் திருமணம் ஆகாதவர் என்பதால், 1 முதல் 13 பிரதிவாதிகள் மட்டுமே மேற்கண்ட ஜெர்மன் என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என்பதால் அவர்கள் மட்டுமே பண பலன்களை பெற தகுதியானவர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் இறந்துபோன ஜெர்மன் என்பவரின் சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால், தாவா வழக்கை தாக்கல் செய்ய எவ்வித உரிமையியும் இல்லை என்றும், இந்த பிராது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மேற்கண்ட குறுக்கு விசாரணையை **13** ஆம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்**.**

**Sd/-Thiru.P.Jaisankar,**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.